### *Editor's Note*

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star' UDUVIL, CHUNNAKAM.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q B / 100125 / 81*

Established: 1841 : A Christian Weekly : Published Every Friday

Vol. 141 JAFFNA, FRIDAY, 10TH APRIL, 1981 No. 15

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

### *Subscription*

Inland: Rs. 35/- per year.
Single issues are available at the VARANY MISSION SALES CENTRE, Model Market, Jaffna at Re. 1/- per copy.

*Apply to:*
**The Manager,**
'Morning Star', Vaddukoddai.


## Asia Sunday

*Asia Sunday,* a day set aside each year to pray for the countries and peoples of Asia, Australia and New Zealand will be celebrated this year on *31-5-81.*

Asia Sunday is organised by the Christian Conference of Asia, a regional ecumenical fellowship of 86 member Churches and 16 national councils of Churches.

This year, *Asia Sunday* will have particular significance as it will fall immediately after the CCA's Seventh Assembly to be held at Bangalore (May 18—22) on the theme " Living in Christ with people ".

The theme of the Assembly according to a CCA communication reminds us that "living in Christ" and " living with people " are *not* separate aspects of Christian living.

We cannot choose one or the other. They go together and they are inseparable. The theme points to that " togetherness " and holds it up as the measure of the integrity of the faith we profess.

## Methodist Church in India

At a historic conference of the Methodist Church of Southern Asia (MCSA) held at Women's Christian College, Madras on 7-1-81, the Methodist Church in India was inaugurated.

MCSA grew out of the missionary work of the Methodist Episcopal Church in USA. Its four bishops have automatically been received as the Bishops of the new Church.

The Church has a membership of over 500,000. Its work is spread across 12 Indian states and the Union Territory of New Delhi. It is involved in Mission work in the Union Territory of Goa and the Andaman Islands.

## Bible, Hymn Books in China

Some 100,000 copies of the New Testament has been distributed to people in China in 1980. The entire Bible has been available since December following the holding of the Third Chinese National Christian Conference.

A Christian quarterly magazine *Tian Feng* has resumed publication since October last year, after being suspended during the cultural revolution.

## Women Centre Celebrations
### A Correction

In the news item published in our issue of 27-3-1981, please note the following *correction* in Paragraph 4 :—

" Mrs. Nathaniel, the Secretary of the Board and Mrs. E. S. Daniel, the Manager of the Centre presented their reports. "

## Uduvil YMCA

The Uduvil Y. M. C. A. (revivived after a lapse of years) had an inaugural meeting on Sunday (5-4-81) at 5-30 p. m. The following were elected Office Bearers:—

President :
Rev. N. W. G. Sugunarajah
Vice-President :
Mr. P. L. Patrick
Gen. Secretary :
Mr. E. S. Curtis
Treasurer :
Mr. L. S. C. Canagasingham

A Board of Directors of *Eleven* members was also set up.

The Uduvil YMCA has a history which dates back to the year 1981. Mr. T. C. Sangarappillai was its first President.

Among the early Secretaries of the Uduvil 'Y' was J. C. Stickney whose efforts were largely responsible for the Uduvil YMCA building which was constructed in 1930. It was during his time that the Udxvil YMCA was honoured by a visit from Mr. and Mrs. Luther D. Wishard, then working under the Student Department of the YMCA.

It is hoped that the new Directors and new office bearers will steer the organisation to measure up to its ancient heritage and also equip itself to play its new role as a strong arm of the Church in meeting the new challenges that confront the youth teday.

## Bible in Tamil Verse

*Kannadasan,* the Poet Laureate of Tamilnadu has recently composal the new Testament of the Bible in verse form in Tamil. He was assisted by Rev. Fr. George of Kalai Kaveri and Rev. Fr. Stanislaus of Bishop's House, Tiruchirapalli.

The work runs to 300 pages in foolscap size. Printed in book form it will be released by Chief Minister of State at a function to be held shortly.

Kannadasan is a Hindu. He first became famous as a popular writer of lyrics for Tamil films.

He is well known among Tamil speaking people in Malaysia, Sri Lanka, Southern Africa and Mauritius.

## *IN BRIEF*

O C. S. *I. Church, Colombo* : The Easter Service will be broadcast over Channel One of the Tamil Service on 19-4-81 from 10 — 10-30 a. m.

O *A Buddhist Dharmaduta Mission* which came to Jaffna during the third week of March has reported to President Jeyawardene that their mission was a great success. The mission was ied by Deputy Minister of Local Government, and Housing Mr. P. C. Imbulana.

*Appreciation*

## Mrs. Ellen Rasamany Wilson

Mrs. Ellen Rasamany Wilson was fondly referred to and will be remembered as " Acca " by the inner circle.

She was rocked in the cradle of the Christian Faith and lulled with lullabies in Hymns and Psalms. In any group she was looked upon as the leader. I 1940 the Lord led her to the altar for matrimony to no less a person than a Man of Faith like that of Abraham in Dr. John R. Wilson whom the inner circle will fondly continue to refer as " Athan ". The results of marriage were four God fearing children, a son in law a daughter in law, grand children and a SPIRITUAL HOME.

The word of God fell on good ground and yielded fruits that sprung up and increased. The cares of the World and deceitfulness of riches and lusts of other things did not choke the word of God. The WILSON HOME is a CHANDELIER holding candles and one of them was ACCA. This candle along with the others radiated CHRISTIAN WITNESSING in and outside their home.

ACCA was the mustard seed which grew into a large tree, and under the shadow of its branches lodged both the poor and the rich. To those who sought Spiritual and Material refuge she HESITATED NOT to calm their STORMS. I happen to be one such beneficiary.

In the wordly sense Eighth of March was the I D E S of march for the Wilson Home to many who have associated with her. In the Spiritual sense this Candle was extinguished by the Will of God. ONLY TO CALL HER HOME.

On the ninth of March many "smote their breasts and returned" to their earthly homes. ACCA has only taken the bend in the journey towards ETERNAL LIFE and no more can Mortal eyes or ears have a glimpse of this celestial personality nor hear her soft sweet voice which failed not to indulge in holy communication. For those of us who have been left, acca has left behind a responsibility for Christian witnessing until such times we meet her at the Lords Table.

" But as many as received him to them he gave Power to become the sons of God even to them that believe on his name".

**Jeyam Canagasingham**

O *St. Thomas College, Bandarawela* had its Annual Prize Giving this week at Keble Memorial Assembly Hall. Mr. Donald R. Toiussaint, Ambassador of the United States of America and Mrs. Charmian Toiussaint were the chief guests.

## IN MEMORIAM

IN EVER LOVING
MEMORY OF
Our Dear Dad

*Just a year, yet how long*
*the parting,*
*Of our dad strangely stalwart*
*With mind undimmed,*
*faith unswerving,*
*" Calling " made sure,*
*faithful steward*
*To the Lord's presence ushered.*

Fondly Remembered by
his loving wife & children.

32, Kotelawala Aveue,
Bambalapitiya.

## News of new Political Developments in Sri Lanka

**Another Select Committee**

The *Motion* in Parliament—for the appointment of a Select Committee to inquire into and report on whether any member of the NSA who held the office of Minister during the period from the end of December 1972 to February 16, 1977 could be held responsible for the recommendations by Mrs. Srima Bandaranayake to to proclaim a State of Emergency ( first proclaimed on 16-3-71 and renewed every month before it lapsed on 16-2-1977 ) was passed on 7-4-81, 111 voting for and 16 against.

The members of the Select Committee are:— Mr. R. Premadasa, (chairman) Mr. Lalith Athulathmudali, Mr. K. W. Devanayagam Mr. Ranil Wickremasinghe, Mr. Vincent Perera, Mr. Harindra Corea and Mr. M. S. M. Aboosally.

**Ministers appointed to develop North**

Eleven Ministers of State have been oppointed by the President to take chage of the development work in Jaffna and organise the UNP work in the peninsula.

The following are the names of the Ministers appointed. The electorates to which they have been assigned appears in brackets against each name.

Mr. Gamini Dissanayake (*Nallur*)
Mrs. Vimala Kannangara (*Pt. Pedro*)
Mr. Festus Perera (*Manipay*)
Mr. E. L. B. Hurulle (*Vaddukoddai*)
Mr. Chandra Bandara (*Kilinochi*)
Dr. Nissanka Wijeyaratne (*Kayts*)
Mr. S. B. Herath (*Kankesanthurai*)
Mr. D. B. Wijetunga (*Kopay*)
Mr. Lalith Athulathmudali (*Jaffna*)
Mr. Ranil Wickremasinghe (*Chavakachcheri*)
Mr. M. H. Mohamed (*Udupiddy*)

உதயதாரகை

UTHAYATHARAKAI

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [ வெள்ளிதோறும் வெளிவருவது.

'நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்''

மலர் 141 ] 10 — 4 — 1981 [ இதழ் 15

# பற்றுப் பணம் — யார் பொறுப்பு?

"பண வீக்கம்" என்ற பதட்ட நிலையை இதுவே முதற் தடவையாக நம் நாட்டவர் காண்கிறார்கள். பிற நாடுகளிற் கண்டதாயும் முன்னான சந்ததியார் தம் அனுபவத்திற் கொண்டதாயும் அதைக் குறித்து நாம் கேள்வியுற்றிருக்கிறோம். எனினும், அதை நேர்முகமாய்க் காண்பதும் அதோடு வாழ்வதுமான நிர்ப்பந்த நிலைக்கு நாம் ஆளாகாமற் போயிருந்தோம். அது நமக்கிருந்த நற்பேறு. இப்பொழுதோ, அது நம் நாளாந்த வாழ்க்கையைத் தொட்டபடி நிற்பதால் அதன் பயங்கர ரூபம் நம்மைப் பீதியடைய வைக்கிறது.

வரவுக்கேற்ற செலவு செய் என்பது நம் மூதாதையர் முதுமொழி. என்னத்தைக் குறித்துச் செலவெனச் சொன்னார்களோ அறியோம் என்கிறார்கள் நம் காலத்தவர். தவிர்க்க முடியாத தேவைகள் உண்டுபண்ணும் செலவையும் குறித்தார்களோ? இல்லையேல், வாழ்வதற்கு அத்தியாவசியமற்ற காரியங்களை மாத்திரம் மனதிற் கொண்டார்களோ? துணிக்கேற்ற அளவாகச் சட்டையை வெட்டு எனப் பொருள்படும் பழமொழி ஒன்று ஆங்கிலத்தில் உண்டு. (Cut your coat according to your cloth). வெட்டுவது சரி; சட்டைதான் அளவற்றதாய்ப் போகும்; உடையவர்க்குப் பயனற்றதாய்ப் போகும் என்கிறார்கள். சரிதான்.

எந்த அமெரிக்க நடுத்தரக் குடும்பத்தினரும் Bankruptcy அல்லது பாப்பர் நிலையின் மூன்று மாத எல்லைக்குள்ளே வாழ்கிறார்கள் என ஓர் எழுத்தாளர் சில வருடங்களுக்கு முன் எழுதி வைத்தார். நம் நாட்டின், தற்போதைய, நடுத்தரக் குடும்பத்தினரோ பாப்பர் நிலை வேலிக்கருகிலேயே வாழ்கிறார்கள் என்றால் மிகையாகாது. இந்த நிலைக்கு யார்தான் பொறுப்பாளிகள்? உலக விலைவாசிகளே காரணமெனச் சாதாரணமாய் நாம் சொல்லிக்கொள்வதுண்டு. சர்வலோகப் பொருளாதார ரீதியில் அது சரியென நாம் கொள்ளலாம். எனினும் பொது மக்களைப் பொறுத்த அளவில் வேறொரு வகையான விஷக் கிருமி இருப்பதை நாம் ஏற்றுக்கொள்ளவே வேண்டும். இருக்கும் நோயை அதிகரிக்கச் செய்வதும், தான் உயிர் வாழத் தன்னைக் கொண்டிருக்கும் உடலை அரித்தரித்து அழிப்பதும் இவ்விஷக் கிருமியே.

இருக்கும் பொருளை ஒளித்து வைத்து, இல்லையெனக் கைவிரித்து ஏமாற்றிப் பின் அரு விலைக்கு விற்றுவரும் வியாபாரி வர்க்கத்தை விஷக்கிருமி எனக் கூறுவதிற் பிழையேது? அப்பாவி மக்களைப் பரிதபிக்க வைக்கிறார்களே! அரசாங்கம் இதற்குடந்தை. விலை குறித்த பொருட்களையும் அர்த்தயாம அறிக்கையினால் விலை கூட்டிவிடுகிறார்கள். ஏற்கெனவே வாங்கி வைத்த பொருட்களையும் விலையேறிவிட்டதெனச் சாட்டுச் சொல்லி அரு விலைக்கு விற்றுப் பிழைப்பதையே தம் வாழ்வின் இலட்சியமாய்க் கொள்கிறார்கள்.

காணி விலை கண்கொளாத உயரம் வரை எட்டினது. புறநாட்டுச் சம்பாத்தியம் எவர்க்குமல்ல, சிலர்க்கே வாய்ப்பாக வந்தமைந்தது. ஒன்றுக்கு இரண்டு, இரண்டுக்கு மூன்றெனப் பணத்தை அள்ளி வீசக்கூடிய பாக்கியவான்கள் அவர்கள். பாடுபட்டுச் சம்பாதித்த பணத்தில் ஒரு சிறிய பங்கைச் சேமித்து, குடியிருக்கக் குடிசையொன்றைக் கட்டுமளவான காணித்துண்டை வேறெவன்தான் வாங்கக்கூடும். இப்போலி விலைகளைக் கட்டுப்படுத்திப் பெரும்பாலான மக்களுக்கு உதவுவதில் அரசாங்கம் இன்னும் ஏன் கரிசனை காட்டவில்லை?

தேவையற்ற செலவுகளைச் செய்வதற்கு அரசாங்கம் உதவி தர வேண்டியதில்லை. உடை, உணவு ஏற்றபடி பெறவும், "சாதாரணமான" ஒரு வாழ்க்கையை நடத்தவும் பொது மக்களுக்கு உதவிக் கரம் கொடுத்து அவர்களைக் காக்கவேண்டுமென்பதே அரசாங்கத்திடம் நாம் விடுக்கும் வேண்டுகோள் பற்றுப் பணத்தையும் பகிர்ந்து வாழ வழியுண்டு — பிறரைக் கொள்ளைகொண்டு தாம் வாழும் சிந்தையுடைய சமுதாயத்திலல்ல. உன்னைப் போல் உன் பிறனையும் நேசி எனப் பெருமான் இயேசு பகர்ந்தருளிய இன்மொழியை ஏற்பவர் மத்தியில்தான் அது ஆகலாம்.

அப்பேர்ப்பட்ட ஒரு நிலையைச் சட்டங்கள் மூலமாவது நாம் காண்பது சாத்தியமா?

## லெபானனில் மீண்டும் தாக்குதல்கள்

லெபானன் — இஸ்ரவேல் எல்லைப்புறமாகவும், பிரதானமாகக் கிறிஸ்தவர்கள் வாழும் சாலே வட்டாரத்திலும் சீரிய — அராபிய தடுப்புப் படையினரின் தாக்குதல்கள் அதிகரித்துக்கொண்டு வருகின்றன. சமீபத்தில் நடந்த தாக்குதல்களில் சுமார் 140 பேர் கொல்லப்பட்டதாகவும் வேறு 500 பேர் வரையிற் காயமடைந்ததாகவும் கூறப்படுகிறது. அமெரிக்க பிரதேசக் காரியதரிசி அலெக்சாந்தர் ஹாய்க் அவர்களின் மேற்கு ஆசிய விஜயத்தின் போது இத்தாக்குதல்கள் அதிகரித்தது குறிப்பிடத்தக்கது.

இஸ்ரவேலின் வெளிநாட்டு விவகார அமைச்சர் இஷ்தாக் ஷாமீர் இத்தாக்குதல்களை "சீரிய, பலஸ்தீனப் பயங்கரவாதிகள் லெபானன் கிறிஸ்தவர்களுக்கெதிராய் நடத்தும் கொலை பாதகச் செயல்கள்" என விவரித்து, உடனடியாக இத்தாக்குதல்களைக் கைவிடுமாறு எச்சரித்தனர். அமெரிக்காவும் பிற ஐரோப்பிய நாடுகளும் இத்தாக்குதல்களுக்கு முற்றுப்புள்ளி போடத் தம் செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டுமென அவர் கேட்டுக்கொண்டுள்ளனர். இத்தாக்குதல்களை நிறுத்தும்படி வெளியிடப்பட்ட கோரிக்கைகளில் இது நாலாவதாகும். எனினும் போராட்டம் நடந்துகொண்டேயிருக்கிறது.

# உடன் வாழும் கிறிஸ்து

( வண. எம். ஏ. இரத்தினராஜா )

அன்று வெள்ளிக்கிழமை ஆண்டவர் இயேசு சிலுவையில் அறையப்பட்டு மூன்று மணி நேர வேதனையின் பின் தம் உயிரை ஈந்தார். அவர் உண்மையாகவே மரித்துவிட்டார் என்பதைப் போர்வீரர் திட்டமாக அறிந்து கொண்டனர். உயிர் பிரிந்த உடல் இறக்கப்பட்டு இரவற் கல்லறையொன்றிலே அடக்கம் செய்யப்பட்டது.

கிறிஸ்துவின் மரணத்தைக் குறித்து அவரது சத்துராதிகள் ஆர்ப்பரித்ததில் ஆச்சரியமில்லை. பாவிகள் மட்டும் பதறினர். எளியவர்கள் மட்டும் ஏங்கினர். நோயாளிகள் மட்டும் நொந்து வாடினர். ஒடுக்கப்பட்டோர், உயர்விழந்தோர், இல்லாதோர் யாவருமே கலங்கினர்.

சனிக்கிழமையும் கடந்துவிட்டது. எதுவுமே நடக்கவில்லை. ஞாயிறு அதிகாலை அவரது கல்லறை வாசலில் நின்று சடலத்துக்கு மரியாதை அளிக்கவேண்டி சில பெண்கள் வந்தனர். வாசலில் உள்ள கல்லை எவர் புரட்ட முடியும் என்ற கேள்வியோடு அவர்கள் கல்லறை வாசலை அடைகின்றனர். ஆனால்...... இதோ பாரமான அந்தக் கல் புரட்டப்பட்டிருப்பதையும் உள்ளே கிறிஸ்துவின் சடலம் இல்லாதிருப்பதையும் அவர்கள் கண்டனர் — பயந்தனர் — திடுக்குற்றனர். உள்ளே எட்டிப் பார்க்கின்றனர். தேவதூதனின் காட்சியைக் காண்கின்றனர். மரித்த இயேசுவைத் தேடுகின்றீர்கள் — ஆனால் அவர் முன் கூறியபடியே உயிர்த்து எழுந்துவிட்டார் என்ற செய்தி அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது.— இயேசு மரித்தார் — ஆனால் கர்த்தராக அவர் உயிரோடு எழுந்தார்.

பயந்திருந்த சீஷர்கள் அறையொன்றிலே ஒளித்து ஒதுங்கிவிட்டனர். பயம், கலக்கம், வேதனை, துன்பம் கொண்டவர்களாய், இனிமேல் எங்களுக்கு வாழ்க்கையில் வழி இல்லையா? ஆறுதலும் அமைதியும் இல்லையா! சந்தோஷமும் சமாதானமுமில்லையா? எஞ்சிய நாட்களெல்லாம், கவலையிலும் கண்ணீரிலும், மனச் சமாதானமற்ற நிலையிலும் தானா வாழ வேண்டும்? இக்கேள்விகளோடு, நிம்மதியற்ற நிலையிலே ஒளிந்து ஒதுங்கிவிட்டனர் சீஷர்கள்...... சடுதியாக இருண்டிருந்த அறையிலே பேரொளி பிரகாசித்தது. இயேசுபெருமான் உயிர்த்தெழுந்தவராக, ஜீவனுள்ள ஆண்டவராக அவர்களுக்குக் காட்சி அளிக்கிறார்.— பயப்படாதிருங்கள். உங்களுக்கு சமாதானம் என்கிறார். பயம், திகில், பதஷ்டம் எல்லாவற்றையும் போக்கிவிடுகிறார்.

அன்றைய தரிசனத்திலே, தோமா என்ற சீஷன் அங்கு இருக்கவில்லை. உயிர்த்தெழுந்த ஆண்டவரைக் கண்டோம் என்று மற்றைய சீஷர் கூறியபோது அவன் அதை நம்பவே இல்லை. இது எப்படி ஆகும். அவருடைய கைகளிலே ஆணி அடிக்கப்பட்டது. விலாவிலே ஒரு பெரிய காயம் உண்டு. நான் என் விரலை அக்காயங்களிலே போட்டுப் பார்த்தாலேயன்றி, அவர் உயிர்த்தெழுந்துவிட்டார் என்பதை நான் நம்பவேமாட்டேன் என்கிறான். மறு ஞாயிறு மாலை, சீஷர் கூடிவந்தவேளை கிறிஸ்து அவர்கள் மத்தியிலே தோன்றி, தோமாவைப் பெயர் சொல்லி அழைக்கிறார். "தோமாவே உன் கையை நீட்டி உன் விரலை என் விலாவிலே போடு" என்கிறார். அவ்வாறே செய்து கண்டதால், "என் ஆண்டவரே என் தேவனே" என்று தோமா அலறுகிறான். "என் அவிசுவாசத்தை எனக்கு மன்னியும்" என்கிறான். "தோமாவே, நீ கண்டதால் விசுவாசித்தாய் காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்" என்று ஆண்டவர் கூறுகிறார்.

எம்மாவூர் என்ற இடத்துக்கு இருவர் நடந்து செல்கின்றனர். வெள்ளிக்கிழமைச் சம்பவத்தைக் குறித்துப் பேசிக்கொண்டே போகின்றனர். வாழ்க்கையிலே நம்பிக்கை இழந்தவர்கள்; வருங்காலத்தைக் குறித்துக் கவலை கொண்டவர்கள்; எண்ணியது நடைபெறாததால் ஏமாற்றம் அடைந்தவர்கள். இனி என்ன செய்வதெனத் தெரியாது திகைத்தவர்கள்; அடுத்தது என்னவாகுமோ என அங்கலாய்த்தவர்கள். சடுதியாக மூன்றும் ஆள் அவர்கள் மத்தியிலே தோன்றுகிறார். கலங்கியவர்களுடன் கலந்து பேசுகிறார் காரியங்களை விளக்குகிறார். அவர்கள் இருதயமே கொழுந்துவிட்டு எரிகிறது. அவரை இன்னார் என்று கண்டு உயிர்த்தெழுந்த ஆண்டவரை உளம் களிக்க வழிபடுகின்றனர்.

நான் என்ன செய்வேன்; யாது செய்வேன், வாழ்க்கையிலே குறுக்கே கிடக்கும் கல்லைப் புரட்டுவது யார் என்ற கேள்வியோடு இருளிலும் பெலவீனத்திலும் நின்று ஏங்கும் சகோதரனே, சகோதரியே! இதோ அந்தக் கல் உனக்காகப் புரட்டப்பட்டிருப்பதை நீ காண்பாய். விசுவாசத்தோடு அருகிலே வா. உனக்கு இருளாக இருந்த இடத்தை எட்டிப் பார்...... இதோ ஒளி வீசுகிறது உன் இருள் அகலும்; உன் பெலவீனம் மறையும்...... ஜீவனுள்ள ஆண்டவரை நீ காண்பாய்.

பயத்திலும் கலக்கத்திலும் வாழ்ந்து, வேதனையிலும் துன்பத்திலும் வருந்தி, வாழ்க்கையில் வெறுப்புடனும் கசப்புடனும் வாழ்ந்து, மன நிம்மதியும் சமாதானமும் இன்றி வாடும் நண்பனே! இதோ உயிருள்ள ஆண்டவர் உனக்குச் சமாதானம் என்கிறார். உலகம் கொடுக்க முடியாத சமாதானத்தை நான் தருகிறேன் என்கிறார். உன்மேல் அவர் தமது ஆவியை ஊதி, உனக்குச் சமாதானம் என்கிறார். எழுந்து பெற்றுக்கொள்.

வருங்காலக் கவலையால், கண்ணீர் வடிப்பவர்களாய், நம்பியிருந்தோம், நம்பியவையும் கடைசியிலே கைவிட்டதால் ஏமாற்றம், விரக்தி, சஞ்சலம் என்பவற்றால் வாடி வதங்கும் நண்பனே, உயிர்த்தெழுந்த ஆண்டவர் உன் வாழ்க்கையின் வழியிலே உன்னைச் சந்திக்கிறார். அவரே உன்னோடு நடந்து வருகிறார். வழி, வாய்மை, வாழ்வு எதுவென அறியாத உனக்கு நானே வழி, நானே வாய்மை, நானே வாழ்வு என்று உனக்கு ஒரு புது வாழ்வை அவர் தருகிறார்.

கிறிஸ்து பெருமானைச் சந்தேகிக்கிறாயா! அவரைப் பரீட்சித்து அறிந்தாலன்றி ஏற்கமாட்டேன் என்கிறாயா? இதோ உன் சந்தேகம் நேர்மையானதாயின் அவர் உனக்குத் தம்மை வெளிப்படுத்துகிறார். அநுபவங்களூடாக அவரை நீ அறிந்துகொள்வாய். புலன்களால் அறியும் அறிவிலும் விசுவாசத்தால் அறியும் அறிவு மேலானது என்பதை நீ உணர்

(3-ம் பக்கம் பார்க்க)

## செய்திகளின் சாரம்

### பாவனையாளருக்கு அளக்கப்படும் அளவு

நாடு பூராவும் மெற்றிக் அளவு முறை உபயோகத்திற்கு வந்துவிட்டது. இன்னமும் பல வியாபாரிகள் கவனமற்றிருப்போரைக் கொள்ளையடிப்பதாய் முறைப்பாடுகள் அதிகாரிகளைக் கிட்டுகிறதாம். யார் அளவால் அளந்து கொடுத்த மீட்டர் அளவுக்குக் காசு பெறுகிறார்களாம். நிறையளவிலும் இப்படியான வஞ்சகச் செயல்களில் விற்பனையாளர் ஈடுபடுவதாகத் தெரிகிறது.

* * *

### நுண்ணலைத் தொலைபேசி

நாட்டின் தந்தித் தொடர்புத் திணைக்களம் போட்டிருக்கும் திட்டங்களின்படி காரியங்கள் நடைபெறுமானால் 1983ஆம் ஆண்டோடு வீதி நீளம் ஓடிச் செல்லும் தந்திக்கம்பிகள் காணப்படமாட்டா. இவைகளின் உபயோகத்திற்குப் பதிலாக நுண்ணலை வானொலியைக் கொண்டு உள்நாட்டுத் தந்தித் தொடர்புகள் இயங்கும். இது துரித சேவையை அளிப்பதோடு கம்பிகள் அறுந்து போகும் தொல்லையும் அற்றதாய் மக்களுக்குப் பயன்படும்.

* * *

### வைத்தியசாலை இடம்பெயர்தல்

யாழ்ப்பாணத்திலிருக்கும் அரசினர் வைத்தியசாலை மிகவும் நெருக்கமான ஒரு வளாகத்துக்குள் இருக்கிறது. இது விசாலிக்கப்படுவதற்குப் போதிய இடமில்லை. இதை முன்னிட்டு இந்த வைத்தியசாலையிலிருந்து சுமார் 2 மைல் தூரத்தில், நாலு ஏக்கர் விஸ்தாரமான காணி ஒன்றுக்கு இதை மாற்றிவிடும்படி சுகாதார அமைச்சர் திரு. காமினி ஜெயசூரியா பணித்துள்ளார்.

### சுப்பர் பெற்ரோல் — விலை அதிகரிப்பு

சென்ற சனிக்கிழமை நடுநிசியிலிருந்து சுப்பர் பெற்ரோல் எரிபொருளின் விலை ரூபா 45/50 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த விலை நாட்டின் எல்லாப் பகுதிகளுக்குமாகும் சென்ற டிசெம்பர் மாதத்திலிருந்து இது மூன்றும் தடவையாகப் பெற்ரோல் விலை ஏற்றப்பட்டது.

* * *

### விலைவாசி உயர்வு எவ்வளவு?

அரசாங்கத்தின் திட்டமிடற் பகுதியினர் கண்ட முடிவுகளின்படி 1977 ஜூலை மாதத்திற்கு ஒப்பிட்டதாய் 1981 ஜனவரி மாதத்தில் இப்பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ளன:

அரிசி — 86·3%; மா — 196·3%; பாண் — 173 3%; பெற்ரோல் — 212·5%; லக்ஸ்பிறே பாற் பவுடர் — 133·4%; மண்ணெண்ணெய் — 400%.

சேவைகள்:

பஸ் கட்டணம் — 200 — 350%;
மின் சக்தி — சுமார் 300%.

தொழிலாளர் சம்பளங்கள் நாளொன்றுக்கு ரூபா 5.60 தொடக்கம் ரூபா 16 இல் இருந்து ரூபா 14.50 தொடக்கம் ரூபா 35 ஆனது.

* * *

### வாந்தி–பேதி நோய் பரவல்

திருகோணமலை, அம்பாறை, தம்புலா பகுதிகளில் வாந்தி—பேதி நோய் பரம்புகிறதென அறியப்படுகிறது. சுமார் 20 பேர் மரணமாயினர்; 234 பேர் நோய் கொண்டவரெனச் சிந்திக்கப்படுகிறது. அவசியமேற்படின் பாடசாலைகள், ஹோட்டல்கள், சாப்பாட்டுக் கடைகள் மூடப்படக்கூடும். எனினும் தடுப்பு நடவடிக்கைகள் அதிகாரிகளினால் தீவிரமாய் நடத்தப்படுகின்றன.

### புதிய பாதுகாப்புச் சேவை

நீர்வேலியில் சமீபத்தில் நடந்த கொள்ளையடித்தற் சம்பவத்தைத் தொடர்ந்து பல ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அரசாங்கத் திணைக்களங்களிலிருந்தும், பிரதானமாக வங்கிகளிலிருந்தும், பணத்தைப் பல இடங்களுக்கும் பரிமாறுதல் விடயமாக இனிமேற் காவற்றுறையினர் பாதுகாப்புச் சேவையளிக்க மாட்டாரெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதையடுத்துப் பல வங்கிகளிலும் பணம் போதிய பாதுகாப்பு அற்ற முறையில் சேர்த்து வைக்கப்பட்டுள்ளதெனவும், வங்கிகள் தமக்குச் சொந்தமான பாதுகாப்புச் சேவைகளை ஆரம்பிக்கும் வரைக்கும் இப்பணங்களைப் பரிமாற்றம் செய்வதற்குப் பட்டாளத்தினரின் சேவையைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனரெனவும் செய்திகள் கூறுகின்றன. தேவைக்கேற்றபடி, இந்தச் சேவையை அளிப்பதற்கு விமானப் படையினரின் (ஹெலிக்கொப்டர்) நேரெழு விமானங்கள் உபயோகிக்கப்படலாமெனவும் தெரிகிறது.

இதற்கிடையில், நாட்டின் வடபகுதியிலும், பிற பாகங்களிலும் கூட, பெருந் தொகையான பணத்தைப் பரிமாற்றம் செய்ய வேண்டிய ஸ்தாபனங்களிலும் வங்கிகளிலும் போதிய பாதுகாப்பு முறைகள் காணப்படுவதில்லையென இதைக் குறித்து ஆய்வு நடத்திய காவற்றுறையின் உயர் அதிகாரிகள் கூறியுள்ளனர். இங்கிலாந்திலுள்ள "சிக்கூறிக்கோர்" எனப்பட்ட பாதுகாப்பு வியாபார நிறுவனம் இந்த நாட்டின் பாதுகாப்பு முறைகளைப் பரிசீலனை செய்து, செய்யப்பட வேண்டியவைகளைச் சிபாரிசு செய்வதற்கென இரண்டு உயர் அதிகாரிகளை இங்கே அனுப்பியுள்ளது. இலங்கையில் ஒரு பாதுகாப்புச் சேவையை நிறுவுவதற்கும் இந்த ஸ்தாபனம் முன்வந்துள்ளது.

### உடுவில் வை. எம். சீ. ஏ. ஸ்தாபிதம்

உடுவில் வை. எம். சீ. ஏ. (கிறிஸ்த வாலிபர் இயக்கம்) பல ஆண்டுகளுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்டது. எனினும் பல காரணங்களையிட்டு அது தொடர்ந்து இயங்காமற் போனது. இரண்டு தடவைகள் அது திருப்பி நிறுவப்பட்டபோதிலும் இப்போ பல வருடங்களாக அது செயலற்றிருந்தது. எனவே திரும்பவும் இதை நிறுவிச் செவ்வையான முறையிற் செயலாற்ற வைக்க வேண்டுமென்ற வாஞ்சை கொண்ட சில கிறிஸ்தவர்களின் ஊக்கத்தினாலும் விடாமுயற்சியினாலும் இது திரும்ப உயிர்ப்பிக்கப்பட்டுள்ளது.

உடுவில் வை. எம். சீ. ஏ யின் துவக்கக் கூட்டம் சென்ற ஞாயிற்றுக்கிழமை 5ஆம் திகதியன்று பிற்பகல் 4.00 மணிக்கு தெ. இ. திருச்சபை ஆலயச் சபை மண்டபத்தில் நடைபெற்றது. கனம் N. W. G. சுகுணராஜா அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அநேகம் பேர் சமுகமளித்தனர். யாழ்ப்பாணம் கி. வா. இயக்கத்தின் முன்னாட் தலைவர் திரு. J. G. அரசரத்தினம் அவர்களும், கி. வா. இயக்கத்தின் வட பிராந்தியத் தலைவர் திரு. S. பரமானந்தன் அவர்களும் சிறப்புரை நிகழ்த்தினார்கள். நாட்டின் பிற கி. வா. இ. ஸ்தாபனங்களிலிருந்து ஆசிச் செய்திகளும் வரப்பெற்றன.

இக்கூட்டத்தில் பின்வருவோர் நடத்துனர் குழுவிற்குத் தெரிவு செய்யப்பட்டனர்:-

கனம் N. W. G. சுகுணராஜா, திருவாளர்கள் P. L. பற்றிக், G. J. ஸ்ரீபன்ஸ், M. தம்பித்துரை, T. A. தம்பியப்பா, L. S. C. கனகசிங்கம், E. S. கேர்ட்டிஸ், J. T. ஹூல், J. T. தம்பிரத்தினம், P. N. ஜெயசீலன், பிறின்ஸ் இரத்தினம்.

பொதுக் கூட்டத்தைத் தொடர்ந்து வந்த முதலாவது நடத்துனர் குழுக் கூட்டத்தில் பின்வருவோர் உத்தியோகத்தராகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர் — கனம் N. W. G. சுகுணராஜா.

உப தலைவர் — திரு P. L. பற்றிக்.

கௌரவப் பொதுக் காரியதரிசி — திரு. E. S. கேர்ட்டிஸ்.

கௌரவப் பொருளாளர் — திரு. L. S. C. கனகசிங்கம்.

### சுவாமி ஞானப்பிரகாசர் முத்திரை வெளியீடு

நல்லூர் சுவாமி என்றழைக்கப்படும் சுவாமி ஞானப்பிரகாசர் நினைவார்த்த முத்திரை வெளியீடு இம்மாதம் 22ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த வைபவம் யாழ். வீரசிங்க மண்டபத்தில் நடைபெறக்கூடுமெனச் செய்திகள் கூறுகின்றன, யாழ். மாவட்ட அமைச்சர், பிரதேச அபிவிருத்தி அமைச்சர், நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர், யாழ். மறைமாவட்ட ஆயர் பேருட்திரு. தியோகுப்பிள்ளை ஆகியோரின் ஆலோசனையுடன் யாழ். மாவட்டத் தபால் அதிகாரி இதற்கான ஒழுங்குகளைச் செய்துகொண்டிருக்கிறார். இந்த வைபவத்தில் ஞானப்பிரகாசர் சுவாமிகளைப் பற்றிய ஒரு சிறு கைநூலும் வெளியிடப்படவுள்ளது.

## புதிய சீனாவில் புத்துயிர் பெறும் திருச்சபை

ஒரு தொகுப்பு—மூலம்: அமெரிக்கச் சீர்திருத்தச் சபைச் சஞ்சிகை "திருச்சபைத் தூது" — ஆங்கில அறிக்கை.

தொகுப்பு: பத்திராசிரியர்.

[கனம் வென்டெல் கார்சன் ஹொங்கொங் கிறிஸ்தவ சங்கத்திற் கடமையாற்றும் ஒரு அ. சீ. திருச்சபையின் மிஷனரி, சென்ற ஆண்டின் கடைக்கூற்றில் சுமார் இரண்டு வாரங்களாகச் சீனாவின் பல பாகங்களையும் சந்தித்துச் சபைகளின் நிலைவரங்களை ஆராய்ந்து, சமீப காலங்களிலே சீனாவின் திருச்சபைகளிற் காணும் எழுப்புதலையும் வளர்ச்சியையும் பற்றி "திருச்சபைத் தூது" சஞ்சிகைக்காக ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்தனர். "அப்போஸ்தலர் நடபடிகளில் ஒரு புது அத்தியாயம்" என்ற தலையங்கத்தில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது. இவ்வறிக்கையிற் காணும் சில கருத்துக்களையும் உண்மைகளையும் நமது கிறிஸ்தவ சாகியத்திற்குப் பயன்படும் என்ற நம்பிக்கையில் இங்கு தொகுத்துத் தருகிறோம்.

நன்றி: "திருச்சபைத் தூது"]

ஒரு புதன்கிழமை காண்ரன் நகரிலுள்ள பிரமாண்டமான ருங் ஷான் ஆலயத்திற்குள் கனம் வென்டெல் கார்சனும், அவருடைய கூட்டத்தினரும் நின்று ஆலய மேடையையும் ஞானஸ்நானத் தொட்டியையும் வேலையாட்கள் திருத்தியமைப்பதைப் பார்த்துக் கொண்டுநிற்கிறார்கள். அந்த ஆலயத்தின் குருமாரில் ஒருவர் கூறுகிறார்:

நமது ஆலயத்தில் சனிக்கிழமை ஒன்றும் ஞாயிற்றுக்கிழமை ஒன்றுமாக இரண்டு ஆராதனைகள் நடத்துகிறோம். இவற்றில் 1600 — 1900 பேர் வரை சமுகமளிக்கிறார்கள். இவர்களில் 40 வீதமானோர் 30 வயதுக்குட்பட்டவர்கள். நூறு வாலிபர் தற்பொழுது ஞானஸ்நானத்திற்கு ஆயத்தப்படுகிறார்கள். இங்கே ஆராதனைக்கு வருபவர்களில் அநேகர் 1967 — 1976 வரை நடந்த கலாச்சாரப் புரட்சியின் காலத்தில் ஆலயங்கள் மூடப்பட்டிருந்தமையால் மனிதர் வேதப் படிப்பு, பாடுதல், ஜெபித்தல், பகிர்ந்துகொள்ளல் ஆகியவற்றிற்காக வீடுகளில் சந்தித்து வந்தார்கள். இங்கே ஆராதனைக்கு வரும் எல்லாரையும் நமது ஆலயம் அடக்க முடியாததால் காரியங்கள் ஒழுங்காய் நடப்பதற்காக நாம் வருகின்றவர்களுக்கு "டிக்கட்" கொடுக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

இந்த நகரத்தின் மத்தியில் முன்னே மெதடிஸ்த ஆலயமாயிருந்த இன்னொரு ஆலயத்தை இப்பொழுது திறந்திருக்கிறோம். அங்கே ஒவ்வொரு வாரமும் 1200 பேருக்கு மேலானோர் ஆராதனைக்கு வருகிறார்கள். வருங்காலத்தில் இன்னும் கூடிய ஆலயங்களை உபயோகத்திற்குக் கொண்டுவரக் காத்திருக்கிறோம்.

(தொடரும்)

### உடன் வாழும் கிறிஸ்து

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வாய், ஜீவனுள்ள கிறிஸ்துவே தம்மை வெறுப்போரையும் மறுப்போரையும் சந்தேகிப்போரையும் சாட்டுச் சொல்வோரையும் குறுக்கிட்டு அடையாளம் காட்டி ஆண்டுகொள்கிறார். அது நம் பாத தோமாவாயிருக்கலாம்; துன்புறுத்திய சவுலாயிருக்கலாம்; ஓடிய அகஸ்தீனாயிருக்கலாம்; புரட்சி செய்த சுந்தர் சிங் ஆக இருக்கலாம்; நீயாயிருக்கலாம்; நானாயிருக்கலாம். வாழ்க்கையிலே பின் தொடர்ந்து, ஒருபோதும் விட்டு நீங்காத அன்பாக உன் வாழ்க்கையைச் சுவீகரிப்பவர் அவரே.

இதோ யுக முடிவு பரியந்தம் உன்னோடு கூடி வாழும் கடவுளாக அவர் மாறிவிட்டார். உன்னைச் சந்திப்பவர் அவர்; உன்னை ஆட்கொள்பவர் அவர்; உன்னோடு என்றும் உடன் வாழும் கிறிஸ்து அவரே, ஆம். உன்மீட்பர் என்றும் உயிரோடிருக்கிறார்.

EDITORIAL

## A Deliberate Claim

G. K. Chesterton in his poem *The Donkey* speaks of the human folly of regarding the animal as "a tattered outlaw of the earth" and "the devil's own walking parody." For, hadn't our Lord used the animal on His Triumpal Entry ? Hadn't the animal been the recipient of its own share of "shouts about his ears" and "palms about his feet ?"

According to Barclay, in the East the Ass was a large and splendid animal and on it kings rode when they came to their servants in time of peace. Only in war did they use horses. The Ass did have a place in the royal stables.

We must *not*, therefore think, of the Triumphal Entry as a thing of humility. Our Lord's entry into Jerusalem was a deliberate claim to be King.

The story of the cleansing of the Temple is the story of an indignant King — indignant at the depths to which graft had penetrated even the sacred precints.

Animals for sacrifice bought inside the temple cost nearly twenty times more than those bought outside. But yet the pilgrim *must* buy.

For, very frequently the temple authorities pronounced a lamb to be "blemished". The astonished pilgrim from the countryside would be told that he could get an "unblemished" one for a small cash difference.

But, the coinage of the provinces was different and "the cash difference" had to be procured at the desks of the exchangers (or exploiters) whose palms have to be greased before any transaction could be concluded.

It was, on the whole, a sordid scene of *exploitation* and, that within sacred walls. The victims were the poor country folk.

One of the distressing features of the Asian scene today is the extent to which corruption and graft have lubricated the bureaucracy while the poor live 'in the backwards' in abject poverty, viewing a lush landscape of ill gotten affluence stretching gorgeously before them.

"Turfs" have to be sprayed at various points before a villager can get anything done even to meet the bare necessaries of life. The "cash difference" is the norm not a special favour.

In one of the Asian countries which, population wise is almost ten times our size we read that there are only 500 Lawyers. Most of the lawyers have almost overnight become prosecutors because of the easy access which the office affords to the public pocket.

But, why speak of other Asian countries when the canker has deep roots in our own public life. "Bribe - takers are smarter now-a-days" was the headline of a news item in *The Sunday Observer* of 29-3-81.

The Bribery Commissioner, according to the news report, has to throw his 'net' in the face of a whole array of new strategies. An apolegetic correctien in the subsequent issue of 5-4-81 that the Department does not on its own initiate action against bribe-takers, does not, in our view, serve to make the picture in any way brighter.

The 'kingship' of Christ in the face of the 'idolatry' we see around us is a theme which needs closer scrutiny by the Christian Church in contemporary Sri Lanka.

Christians have to be chary, with regard to some of the heavy "idols" in common "worship" in our development efforts — "*success*" "*efficiency*", "goals", "strategies", "dynamism" etc. etc.

Bishop Newbigin and his team in their Evaluation Report of the Christian Medical College Vellore have cautioned the institution not to pursue excellence *in standard as an end in itself* which according to the Report is *idolatry.*

To give up our 'idols' and to accept the "kingship" of Christ is not easy. In the temple, Jesus seized "a drover's whip" (to use the words of Lloyd Douglas) and drove the animals out of the court.

The cages of the doves were thrown open and the birds were soon over the building. The money exchangers' tables and money tills were upset. The grim faced disciples retreated to the outer wall. "This" muttered Peter, *will settle it.* "*They will never forgive him.*

We know that they never *did.* The events which we 'observe' this week remind us of the *price* we may have to pay for giving up our "idols".

But price or no price, one thing is certain. Our social security, our economic planning, our political blueprints, our material prosperity our Church programmes, and all our "habits of thought and action" will be *added unto us* only *within the Kingdom.*

*Melbourne 1980*

## Christ - Crucified and Risen

**Challanging the Powers**

There are many different situations in which the churches are called to challange the powers. In some situations the powers are clearly oppressive; other situations are "mixed" that is to say, that on some points the powers are seen to be acting in ways which affirm the humanity of the people sometimes by the grace of God they positively embody higher levels of justice because of their responsiveness to the needs and rights of all citizens. The criterian for determining the relation to the powers is the extent to which God's creative, liberating and serving power is evidenced in their actions, and the extent to which equality is established. We have shared experiences from Churches which have found the siding with downtrodden or marginalized people and being sensitive to their needs means sharing in their suffering.

When the Churches challenge the powers in the name of people who are being dehumanized, the credibility of the Churches with the oppressed is put to the test. They lose their credibility if they are not consistent in their concern for the people in greatest need. In such situations the Churches act as agents of renewal and they must be prepared to be minorities but they can be creative minorities if they pick up issues which are vital for the community and thus motivate others to join in the struggle for the full humanity of all the people . . . .

We have become aware that the powers of the World make themselves felt also in the life of the Church. The tensions which are present in the community are also present in the Church, so that the Churches have to struggle with these tensions in their own lives, as well as outside. This struggle can be spiritually exhausting and we have heard of Christians becoming "burnt out". We acknowledge our need to engage more faithfully in profound wrestling in prayer as essential to our committment. It becomes therefore a missionary obligation for the Churches to develop a dynamic spirituality including renewed resources for education and supportive community . . .

**Experiencing the Power of the Crucified Christ**

We rejoice that in certain revolutionary situations of our time the power of forgiveness is seeking to replace the power of vengeance. In other situations the experience of losing status has been the source of spiritual strength. Elsewhere, the Churches, trusting in the power of Christ, have enabled ethnic minorities io recover their identity and to stand up against unjust goverment powers . .

*(to be continued)*

## Kopay Seat Nominations

In the front line of nominations for the Kopay seat rendered vacant by the unexpected death of Mr. S. Kathiravelupillai, (who held the seat for nearly 15 years.) are the following : —

Mr. S. Nadarajah, attorney-at-law, Mallakam and former Senator who was very closely associated with Mr. S. J. V. Chelvanayakam in politics, Mr. M. Alalasundaram, also a veteran of the former Federal Party and Mr. S. Chandrakason, attoney-at-law, the youngest son of Mr. S. J. V. Chelvanayakam and son-in-law of the late Dr. F. M. V. Naganathan of the Federal Party.

## New appointments at the WCC, 1981

- Rev *Wesley Ariyarajah* has been Programme Secretary of the sub-unit on Dialogue with People of Living Faiths and Idealogies since 1-1-81. He was Vice Moderator of the WCC's Commission on Faith and Order.
- *Rev. Samuel Isaac* from India has taken up the post of Secretary for ecumenical sharing of personnel. Formerly he was Director of the Asian Christian Service programme of the EACC.
- *Mr. T. K. Thomas*, who since 1977 has been the communications secretary for the CCA will take up the post of publication Editor in the Communication Department from 1-8-81.

## 1981—Year of the Second Ecumenical Council

The year 1981 marks the 1600th anniversary of the Council of Constaninople which adopted the final version of the Confession of the Christian faith known as the *Nicene Constantinopolitan Creed.*

"This year will give to the divided Christian Church the occasion to proclaim together once again the credo of the one Holy Catholic and Apostolic Church as formulatad by the Fathers of the undivided Church of Christ" said Patriarch Dimitrios who is recognised by the Orthodox Churches as Primus inter pares.

IN BRIEF

- *Development Councils*: A sum of Rs. 55,450,455 has been set apart by the government for the Elections on 4-6-81.
- *Sri Lanka's population* stands at 14,849,295 on 17-3-81 when the National Census was taken The population in the 1971 census was 12,689,897. There is an increase of 17.1 per cent in the population during the period 1971—1981. The annual growth rate is 1.7 per cent.
- *Towards Greater Unity.* The Joint Council of the Church of North India, the Church of South India and the Mar Thoma Church had its Second Meeting on the 7th and 8th of January.

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB./100125/81*

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philip Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road Jaffna, at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, April, 10th 1981.